ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2020), மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2020)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ரகுபதி, என்னவென்று சொல்லுங்கள்.

திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தினுடைய 21–வது பிரிவிலே இதுகுறித்து விரிவான திட்டங்கள் கொண்டு வருகிறபோது, அப்பகுதியினுடைய நிலங்கள் மற்றும் கட்டடங்களின் உரிமையாளர்களுடன் கலந்தாய்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், இப்போது அந்தப் பிரிவினுடைய எண்ணிக்கையை வைத்து நேரடியாகவே நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு அனுப்பி விடலாமென்று அந்தச் சட்டத்திலே திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அது பொது மக்களுக்கும், சமூக நீதிக்கும் எதிரான ஒன்றாகும். ஏனென்று

@ 16-9-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2020 செப்டம்பர் 16] [திரு. எஸ். ரகுபதி]

சொன்னால், பிரிவு 21–லே ஆரம்பக் கட்டத்திலேயே பொது மக்கள் தங்களுடைய நிலையைக் கலந்தாய்வின்போது தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பிருக்கிறது. ஆனால், அதற்கு அரசாங்கம் சொல்கிற காரணம், பிரிவு 27–லே அவர்கள் தங்களுடைய ஆட்சேபணைகளைப் பின்னர் தெரிவித்துக்கொள்ளலாம் என்று சொல்கிறது. ஆகவே, பிரிவு 21–லே கலந்தாய்வு செய்துவிட்டு, பிரிவு 27–லே அவர்கள் நகர் ஊரமைப்பு இயக்குநரிடத்திலே ஆட்சேபணை செய்வதற்கு இடைப்பட்ட காலத்திலே அவர்கள் நிலத்தின் உரிமை மாற்றம் செய்யப்பட்டால் 'A' பதிவேடு போன்ற வருவாய் ஆவணங்கள் அல்லது கூறப்பட்ட திட்டத்தில் உள்ளடங்கிய அனைத்து உரிமையாளர்களின் கூறப்பட்ட அடங்கலிலுள்ள விவரங்களைத் திரட்டுதல் தொடர்பாக தேவையற்ற குழப்பம் மற்றும் அளவிற்கு மேற்பட்ட காலதாமதத்தை உருவாக்குமென்று ஒரு காரணத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்போது நிலம் எடுக்கின்றபோது அந்தக் கால அவகாசம், கலந்தாய்வு செய்ததற்குப் பிறகு இதைச் சொல்கிறபோது, அவர்கள் கலந்தாய்வே செய்யவில்லையென்று சொன்னால், நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும். எனவே, இதே தவறு அங்கே மீண்டும் வருமா, இல்லையா? நகர் ஊரமைப்பு இயக்குநரிடம் ஆட்சேபணைச் சொல்கிறபோது நான் என் பெயரில் இருந்த இந்த நிலத்தை இன்னொருவருக்கு விற்றுவிட்டேன்; பட்டா மாறுதல் செய்துவிட்டேன் என்று சொல்வதற்கு வாய்ப்புகள் எப்போதும் உண்டு. எனவே, இதெல்லாம் காலதாமதத்தை ஏற்படுத்தும் என்ற ஒரு காரணத்தைச் சொல்லி, 21–வது பிரிவை நீக்குவது தவறான ஒன்றாகும். ஏனென்று சொன்னால், பிரிவு 27 என்பது பிரிவு 21–க்கு மேல்முறையீடு செய்வதைப்போல ஆகும். அதனால், 21–வது பிரிவு அவசியம் நம்முடைய நகர் ஊரமைப்புச் சட்டத்திலே இருக்க வேண்டும். எனவே, இந்தத் திருத்தம் தேவையில்லை. அதைத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்துகிறது. நில உரிமையாளர்களுக்கும், கட்டட உரிமையாளர்களுக்கும் ஆரம்ப நிலையிலேயே தங்களுடைய நிலம் எடுக்கப்படுகிறது; கட்டடம் எடுக்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ள அந்தக் கலந்தாய்வு உதவியாக இருக்கிறது. எனவே, இதைக் கருத்திலே வைத்துக்கொண்டு பிரிவு 21–லே கொண்டு வருகிற திருத்தத்தை அரசாங்கம் திரும்பப் பெற்றுக்கொண்டு, 1971 ஆம் ஆண்டு நகர் ஊரமைப்புச் சட்டத்தில் ஏற்கெனவே உள்ள பிரிவு 21 திருத்தப்படாமல் இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு என்று சொல்லி அமர்கிறேன்.

பிற்பகல் 2–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரிவான வளர்ச்சித் திட்டம் இங்கு கொண்டுவரப்படுவதன் நோக்கமே காலதாமதம் இல்லாமல் அந்தத் திட்டம் முழுமையாக குறைந்த கால அவகாசத்தில் முடிக்கப்பட வேண்டும் என்பதுதான். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் வீட்டு வசதித் துறை அமைச்சராகப் பணிபுரிந்திருக்கிறார்கள். அவருக்கு இந்தத் திட்டம் பற்றி நன்றாகவே தெரியும் என்று நான் நினைக்கிறேன். தெரிந்திருந்தும் சில பல குறைபாடுகளைச் சொல்ல வேண்டுமென்று உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். யாருக்கும் எந்த உரிமையும் மறுக்கப்படவில்லை. சட்டப் பிரிவு 27–ல் நில உரிமையாளர்களிடம் விசாரணை செய்து, திட்டம் தயாரித்து சென்னைக்கு அனுப்பி, மறுபடியும் அந்தத் திட்டம் முழுமை பெறவேண்டுமெனில், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் ஓராண்டிற்கு மேலாகிவிடுகிறது. பிரிவு 27–ல் அவர்கள் மீண்டும் விசாரிக்கப்படுகின்றபோது சிலர் நிலத்தை விற்றுவிடுவார்கள், உரிமை மாற்றப்பட்டிருக்கும், இப்படிப்பட்ட சூழ்நிலை வரும்போது மறுபடியும் முழுமையாக திட்டம் தயாரிக்கவேண்டிய ஒரு சூழ்நிலை உருவாகின்றபோது காலவிரயம் ஏற்படும் என்பதைக் கருத்தில் கொண்டுதான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் திட்டமிட்ட வளர்ச்சிக்கு உதவி செய்யும் வகையில் நகர ஊரமைப்புச் சட்டம், 1971–ன்கீழ் முழுமைத் திட்டம் (Master Plan) மற்றும் விரிவான வளர்ச்சித் திட்டம் (Detailed Development Plan) போன்ற சட்டப்படியான திட்டங்கள் தயாரித்துச் செயல்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. முழுமைத் திட்டம் என்பது ஒரு நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளூர் திட்டப் பகுதி—Local Planning Area (LPA)—என அறிவிப்புச் செய்து, அப்பகுதி முழுமைக்கும் தயாரிக்கப்படும் நிலப் பயன்பாடு (land use) வரையறுக்கும் விதமான திட்டமாகும். சுமார் 20 ஆண்டுக் காலத்திற்குள் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில்

2020 செப்டம்பர் 16] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

ஏற்படக்கூடிய மக்கட்தொகைப் பெருக்கத்தைக் கணக்கிட்டு அதற்கேற்ப தேவைப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு செயல்படுத்தவேண்டிய குறைந்தகாலத் திட்டங்கள், நீண்டகாலத் திட்டங்கள் போன்றவற்றை வகுத்து வழங்கும் திட்டமே முழுமைத் திட்டமாகும். இத்திட்டத்தின்படி ஒவ்வொரு சர்வே எண் நிலத்திற்கும் குடியிருப்பு, வணிகம், தொழிற்சாலை, விவசாயம், பூங்கா, விளையாடும் இடம் போன்ற நில உபயோக வகைப்பாடுகள் நிர்ணயிக்கப்பட்டு அதன்படியே எதிர்கால வளர்ச்சி ஒழுங்குபடுத்தப்படுகிறது. மேலும். முழுமைத் திட்டத்தின் எதிர்காலத் தேவையை கருத்தில்கொண்டு போக்குவரத்து சம்பந்தமாக சுற்றுவட்டச் சாலைகள் உள்ளிட்ட பிற வசதிகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்படுகின்றன.

விரிவான வளர்ச்சித் திட்டம் (Detailed Development Plan (DDP) என்பது முழுமைத் திட்டம் (Master Plan) உள்ள பகுதிக்குள் அமையும். சுமார் 100 ஏக்கரிலிருந்து 400 ஏக்கர் வரை நிலம் உள்ள விரிவாக வளர்ச்சியடைந்துவரும் பகுதிகளைக் கண்டறிந்து, அப்பகுதிகள் திட்டமிட்ட வளர்ச்சியடைவதை உறுதி செய்வதற்காகத் தயாரிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் திட்டமாகும். அத்திட்டத்தில் சிறிய இணைப்புச் சாலைகள், பூங்காக்கள், விளையாடும் இடங்கள் போன்ற பொது உபயோக இடங்களை ஒதுக்கீடு செய்தல், நிலங்களின் பயன்பாட்டை வகைப்படுத்துதல், வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளை வகுத்தல், புராதனச் சின்னங்களைப் பாதுகாத்து பராமரிப்பதற்கான திட்டக்கூறுகள் மற்ற பிறவும் உத்தேசிக்கப்படுகின்றன. விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கான வழிமுறைகள் நகர் ஊரமைப்புச் சட்டம், 1971-ல் வரையறுக்கப்பட்டது. அந்த வரையறுக்கப்பட்டச் சட்டத்தின் உட்கூறாக ஒன்று சட்டப் பிரிவு 20, உட்பிரிவு–2(ஆ)-ன்படி திட்டத்தில் அடங்கும் பகுதியில் அமையும் அனைத்து நிலங்கள் மற்றும் கட்டடங்களுக்கான உரிமையாளர் விவரம் சேகரிக்கப்படவேண்டும். இரண்டாவதாக சட்டப் பிரிவு 20, உட்பிரிவு 2(இ)-ன்படி அரசு அல்லது தனியாரின் அனைத்து நிலங்களின் பரப்பளவு விவரங்கள் சேகரிக்கப்பட வேண்டும். மூன்றாவதாக சட்டப் பிரிவு 21-ன்படி திட்டத்தில் அடங்கும் அனைத்து நிலங்கள் மற்றும் கட்டட உரிமையாளர்களுடன் கலந்து பேசிய பின்னர் வகுக்கப்படும் கால அளவிற்குள் விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு இயக்குநர், சென்னைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றுள்ளது. இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றி

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2020 செப்டம்பர் 16

திட்டம் தயாரிப்பது காலதாமதத்திற்கு வழிவகுக்கிறது. திட்டம் தயாரித்த பின்னர் நில எடுப்பு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, நில உரிமையாளருக்கு அறிவிப்பு வழங்கும்போது, நில உரிமை பல நபர்களுக்கு மாறிவிடுவதால் மீண்டும் சரியான நில உரிமையாளர்களின் விவரங்களைச் சேகரித்து நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. இதனால் முன்னர் சேகரித்து வைத்திருந்த நில உரிமையாளர் விவரம் பயனற்றதாக, மாறுபட்டிருக்கக்கூடிய ஓர் அசாதாரண சூழ்நிலை ஏற்படுகிறது.

பிற்பகல் 2–45

விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிக்கும் மேற்காணும் முறையை எளிமைப்படுத்தும் விதமாக திட்டம் தயாரிப்பதன் ஆரம்ப நிலையிலேயே திட்டத்தில் உள்ளடங்கும் நிலங்களின் அனைத்து உரிமையாளர்களுடனும் கலந்து பேசவேண்டிய அவசியம் எழவில்லை என அரசு முடிவு செய்தது. அதன்படி கீழ்க்கண்டவாறு சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படுகிறது:

அதாவது, ஒன்று சட்டப் பிரிவு 20, உட்பிரிவு–2(ஆ) நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று நான் ஏற்கெனவே இந்தச் சட்டப் பேரவையில் தெரிவித்தேன். அது நீக்கம் செய்யப்பட வேண்டும். மேலும், 'பகுதியில் உள்ள நிலங்கள் மற்றும் கட்டடங்களின் உரிமையாளர்களுடன் வகுத்துரைக்கப்பட்ட முறையில் கலந்தாலோசித்த பின்பு' என்னும் வார்த்தைகளை சட்டப் பிரிவு 21–லிருந்து நீக்கம் செய்யப்பெற வேண்டுமென்று இருக்கிறது.

சட்டப் பிரிவு 27–ன்கீழ் திட்டம் தயாரிப்பது சம்பந்தமாக தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் அறிக்கையின்படி திட்டத்தை மேம்படுத்தும் வகையில் ஆட்சேபணைகளையோ மற்றும் ஆலோசனைகளையோ தெரிவிக்க விரும்பும் எந்த ஒரு நபருக்கும் அதற்கான வாய்ப்பு வழங்கப்படும் என உள்ளது. எனவே, இந்தச் சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படுவதால் நில உரிமையாளர்களைக் கலந்து பேசி, திட்டம் தயாரித்தல் என்னும் எளிய முறையில் பாதிப்பு ஏதும் இல்லாமல், நடைமுறை மட்டும் எளிமைப்படுத்தப்படும். உரிய சட்ட வழிமுறைகளைப் பின்பற்றி திட்டம் செயல்படுத்த நில எடுப்பு திட்டக் குழுமத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை சட்டமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

2020 செப்டம்பர் 16]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

5. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஏ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, இடைத் தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு மற்றும் பிற பணிகளுக்கு ஒதுக்கீடு செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு கூட்டத் தொடரின் கடைசி நாள். அடுத்த முறை அவையை எப்போது கூட்டுவீர்களோ? தெரியவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொல்லிவிட வேண்டும். நம்முடைய சட்டமன்றத்தில் எம்.எல்.ஏ.-க்கள் சிலபேர் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். அந்தத் தொகுதிகளில் இடைத் தேர்தல் நடந்தது. இடைத்தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்